தலைவருடைய மணிக்கும் உரிய வாய்ப்புகளையும், மதிப்பையும் கொடுத்து நடந்துகொண்டு தொடர்ந்து கண்ணியத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து திரு. பி. எச். பாண்டியன்.

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தில் காலியாகவுள்ள நீதிபதிகள் பதவிகளை நிரப்புவது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக இருக்கக்கூடிய நீதிபதிகள் பதவிகளை நிரப்புவதற்குத் தமிழக அரசிடமிருந்து மத்திய அரசாங்கத்திற்குப் பெயர்களை அனுப்பிவிட்டார்களா? அப்படி அனுப்பிவிட்டார்களானால் யார், யார் பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டாமா? இன்றைக்கு வந்திருக்கிற அரசு freedom of information அதாவது மக்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதுபோன்ற நியமனங்களை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர் சங்கத்திற்கும் தெரியாமல் பெயர்களை அனுப்பினால், அவர்கள் பதவி ஏற்ற பிறகு அவர்களைப் பற்றி யாரும் பேசவும் முடியாது, வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவும் முடியாது. அந்தக் காரணத்தால் தான் இதனை நான் சொல்கிறேன். மேலும் இந்தப் புதிய முறையை இன்றையதினம் பல மேலை நாடுகளில் பின்பற்றுகிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்கத் திருநாட்டில் இவ்வாறு நியமிப்பதற்கு முன் வழக்கறிஞர் சங்கங்களைக் கேட்கிறார்கள். அதுபோல யார் யாரை நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென்று அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பாஸ் செய்த பிறகு தான் நியமனம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட ராஜமன்னார் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று கூறியிருக்கிறது. ஆகவே, யார் யாருடைய பெயரை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க முடியாவிட்டாலும் கூட எத்தனை பேர்களுடைய பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் யார், யாருடைய பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்

1990 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

பதைச் சொல்ல இயலாது. உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டு முன் உதாரணங்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இந்த அவையிலே தலைவராக மாத்திரமல்லாமல் முன்பு இருந்த அரசுக்கு நல்ல ஆலோசகராகவும் இருந்திருக்கிறார்கள். அப்போது இந்த ஆலோசனைகள் எல்லாம் சொல்லப்பட்டனவா? அவை ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. ஒருவேளை அவர் சொல்லியிருக்கக் கூடும். இருந்தாலும் மாநில அரசே இன்னின்ன பெயர்கள் என்று நிர்ணயித்து அறிவிக்கும் முடிவை மேற்கொள்ள இயலாது. ஏனென்றால் இது டெல்லி வரை சென்று, அதற்குப் பிறகுதான், அதனை ஏற்றுக்கொண்ட பிறகுதான் அந்தப் பெயர்களை அறிவிப்பது என்கிற நிலை இதுவரையிலே நடைமுறையில் இருந்து வருகிறது. நம்முடைய உயர் நீதிமன்றத்தில் மொத்த நீதிபதிகளுடைய Sanctioned strength 25. இப்போது இருப்பவர்கள் 19 பேர். நாளையதினம் ஒருவர் ஓய்வு பெறுகிறார். அந்த இடத்தையும் சேர்த்தால் செய்யப்பட வேண்டிய நியமனங்கள் 7 என்று ஆகிறது. நாம் புதிதாகக் கேட்டு அதற்காக ஆணை எதிர் பார்க்கப்படுவது 7 பேருக்கு, நாம் முதலில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனே 4 பேருக்கும் பிறகு 8 பேருக்கும் புரப்போசல் அனுப்பி, இதுவரையிலே அதற்கான அங்கீகாரம் நமக்கு வந்து சேரவில்லை. மறுபடியும் ஆட்சி மாறிய பிறகு மீண்டும் அதற்குள்ள முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மறுபடியும் அந்தப்பெயர்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு நாம் அந்த 8 பேர்களுக்குப் பதிலாக 6 பேர்களுடைய பெயர்களை அனுப்பி இருக்கின்றோம். முதலில் அனுப்பப்பட்டு நீண்ட நெடுங்காலமாக இன்னும் அங்கீகாரம் பெறாமல் இருப்பது 4; மறு பரிசீலனைக்குப் பிறகு அனுப்பப்பட்டு இருப்பது 6; ஆக மொத்தம் 10 பெயர்கள் நம்முடைய சார்பில் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் அதற்கான அங்கீகாரம் வந்தபாடில்லை.

10-30 மணி

(இ) பால் கொள்முதலில் வெட்டு செய்துள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்குட்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் சங்க அங்கத்தினர்களிடமிருந்து 10 முதல் 15 சதவீதம் பாலைக் குறைத்து வாங்க வேண்டுமென்று ஒன்றியம் கட்டளையிட்டு, வாய்மொழியாகச் சங்கச் செயலாளருக்கு உத்திரவு வழங்கி, பால் வாங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் பாலை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS